A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 77 / 2021**

திரு. மா. செந்தமிழ்செல்வன்,
த/பெ. மாணிக்கம்,
குடிகாடு தெரு, காடுவெட்டாங்குறிச்சி அஞ்சல்,
அரியலூர் மாவட்டம் – 612 904.
………மேல்முறையீட்டாளர்
(திரு. மா. செந்தமிழ்செல்வன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு, அரியலூர் – 621 713.

2. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/ஜெயங்கொண்டம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
12 A1, குஞ்சிதபாதபுரம், ஜெயங்கொண்டம்,
உதயர்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் – 621 904.

3. உதவி பொறியாளர்/ இ.கா./தா. பழூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1/43, செட்டி தெரு, தா. பழூர்,
உதயர்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் – 621 904.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு T. செல்வராஜ், செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்
திரு B. பாக்கியராஜ், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/ஜெயங்கொண்டம்
திரு. P. இளையராஜா, உதவி பொறியாளர்/ இ.கா./தா. பழூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 29-09-2021**

**கேட்புரை நாள்: 23-11-2021**

**ஆணை நாள்: 21-02-2022**

29.09.2021 அன்று பெறப்பட்ட திரு. மா. செந்தமிழ்செல்வன், த/பெ. மாணிக்கம், குடிகாடு தெரு, காடுவெட்டாங்குறிச்சி அஞ்சல், அரியலூர் மாவட்டம் – 612 904 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 77/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 16.11.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது நிலத்திற்கு அருகாமையில் செல்லும் உயரழுத்த மின்கம்பியில் இருந்து புதிய மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்கிட வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது ஆழ்குழாய் கிணறு உள்ள நிலத்திற்கு அருகாமையில் மின் மாற்றி அமைத்து தர வேண்டி மேற்பார்வை பொறியாளர்/பெரம்பலூர் அவர்களிடம் புகார் மனு அளித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்திற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் 05.09.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 05.09.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**<u>மன்றத்தின் தீர்வு</u>**:*

*திரு.செந்தமிழ்செல்வன், த/பெ. மாணிக்கம் காடுவெட்டாங்குறிச்சி அவர்கள் தனது நிலத்துக்கு அருகாமையில் செல்லும் உயர்அழுத்த மின் கம்பியில் இருந்து புதிய மின்மாற்றி அமைத்து தட்கல் திட்டத்தின் கீழ் ரூ.400000/- செலுத்தியுள்ள தனக்கு மின் இணைப்பு வேண்டி இம்மன்றத்தில் மனு அளித்திருந்தார்.*

*மேற்படி திரு.செந்தமிழ்செல்வன் அவர்களுக்கு முறையாக மின் இணைப்பு மனுதாரர் நிலத்திற்கு ஏற்கனவே அருகிலுள்ள தரம் உயர்த்தப்பட்ட மின்மாற்றியிலிருந்து குறைந்த செலவீனத்தில் மின்பாதைகள் அமைத்து மின் இணைப்பு எண் 329-020-730-ல் கடந்த 01.04.2021 அன்று வழங்கப்பட்டுவிட்டதாக வாரிய தரப்பு சாட்சிகள் விசாரணையில் தெரிவித்ததன் அடிப்படையில் மனுதாரரின் மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க தேவையில்லை எனக்கருதி இம்மன்றம் தீர்ப்பளித்து உத்தரவிடுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.11.2021 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. மா. செந்தமிழ்செல்வன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு T. செல்வராஜ், செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர், திரு B.பாக்கியராஜ், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/ஜெயங்கொண்டம் மற்றும் திரு. P. இளையராஜா, உதவி பொறியாளர்/ இ.கா./தா. பழூர், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 இலஞ்சம் பெற்றுக் கொண்டு மின் மாற்றி அமைப்பதில் முறைகேட்டில் ஈடுபட்ட தா.பழூர் உதவி மின் பொறியாளர் மற்றும் CI சிவக்குமார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், தட்கல் முறையில் ரூ.4,00,000/– செலுத்தியுள்ள தனக்கு, தனது ஆழ்குழாய் கிணறு உள்ள நிலத்துக்கு அருகாமையில் மின் மாற்றி அமைத்துத் தர நடவடிக்கை கோரியும் 17.07.2021–இல் பதிவஞ்சலில் தலைவர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், பெரம்பலூர் அவர்களுக்கு புகார் மனு அனுப்பி மேற்படி மனு 19.7.2021–இல் பெறப்பட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி மனுவின் நிலை குறித்து அறிய 18.8.2021–இல் எதிர்மனுதாரர் அலுவலகத்துக்கு தான் சென்றதாகவும், உதவி செயற்பொறியாளர் திரு.சேகர் அவர்கள் தனது புகார் மனுவின் முகவரியை மேற்பார்வை பொறியாளர் என மாற்றி எழுதித் தருமாறு கூறியதற்கு தான் மறுத்ததாகவும், அதன் பிறகு தலைவர் அவர்களிடம் முறையிட்டு 18.8.2021 தேதியில் மீண்டும் அதே மனுவைத் தரக் கோரியதன் அடிப்படையில் வழக்கு எண் 07/2021 பதிவு செய்யப்பட்டு 31/8/2021 மாலை 4,30 மணிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டதாகவும், மேற்படி விசாரணையில் தான் தெரிவித்த எந்த கருத்துக்களையும், ஆதாரங்களையும் தீர்ப்பில் பதிவு செய்யாமல், தான் குறைகளை தெரிவித்ததாகத் மேலோட்டமாக தெரிவித்து முறைகேட்டில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு சாதகமாகவும், அவர்கள் தெரிவித்த பொய்யான தகவல்களை ஏற்றும் தீர்ப்பளித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 புகார் மனு அனுப்பிய பிறகு ஜெயங்கொண்டம் உதவி செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்று அதில் திரு.ராஜேந்திரன் நிலத்தில்

அமைத்துள்ள மின் மாற்றியிலிருந்து தனது நிலத்தின் ஆழ்குழாய் கிணறு ஏறத்தாழ 50 மீட்டர் தொலைவில் உள்ளதாக பொய்யான தகவலைத் தெரிவித்திருந்ததாகவும், மேற்படி தூரம் சுமார் 500 மீட்டர் என்றும், அந்த மின்மாற்றியிலிருந்து தனது ஆழ்குழாய் கிணறு வரை 8 மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், 50 மீட்டர் தொலைவிற்கான 8 மின் கம்பங்கள் அமைத்துள்ளார்கள் என்றும், அவர் தெரிவித்துள்ள 50 மீட்டர் தொலைவில் தனது ஆழ்குழாய் கிணறு இருக்கும் பட்சத்தில், மேற்படி மின்மாற்றியிலிருந்து மின் இணைப்பு வழங்குவதை ஆட்சேபனை ஏதும் இன்றி மேற்படியார் மீது நடவடிக்கை எடுக்குமாறு விசாரணையில் தெரிவித்ததாகவும், விசாரணையில் தெரிவித்த தகவல் எதையும் தலைவர் அவர்கள் தீர்ப்பில் பதிவு செய்யவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மின் மாற்றியிலிருந்து 50 மீட்டர் தொலையில் தனது ஆழ்குழாய் கிணறு உள்ளதாக தெரிவித்த ஜெயங்கொண்டம் உதவி செயற்பொறியாளர், மேற்படி விசாரணையில் 5 மின் கம்பங்கள் அமைத்து மின் இணைப்பு வாங்கியுள்ளதாக மீண்டும் பொய்யான தகவலைக் கூறியதாகவும், தான் மேற்படி மின் மாற்றியிலிருந்து 8 மின் கம்பங்களுக்கு (500 மீ) அப்பால் தன் ஆழ்குழாய் கிணறு உள்ளது எனக் கூறியது தீர்ப்பில் பதிவு செய்யப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 ஏற்கனவே தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ரூ.4,00,000/- இலட்சம் தான் செலுத்தியுள்ள நிலையில், பொய்யான தகவலைத் தெரிவித்து, தன் நிலத்துக்கு அருகிலேயே மின்மாற்றி அமைக்க வேண்டும் எனில் மீண்டும் தான் மதிப்பீட்டுத் தொகை மின்சார வாரியத்துக்கு செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் என்றும், தனக்கு Estimate தயார் செய்ய தன் நிலத்துக்கு வந்த தா.பழூர் CI சிவக்குமார், தன் நிலத்தின் அருகாமையில் மின் மாற்றி அமைப்பதாக estimate தயார் செய்துள்ளதாகக் கூறி ரூ.10,000/- தன்னிடம் கையூட்டு பெற்றதையும், இலவச மோட்டார் மின் இணைப்பு கோரிய திரு.ராஜேந்திரன் அவர்களிடம் ரூ.1,00,000/- கையூட்டு அவரும் தா.பழூர் AE அவர்களும் பெற்றுள்ளனர் என தெரிவித்த தகவலையும் தீர்ப்பில் தலைவர் அவர்கள் பதிவு செய்யவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 அதனால்தான் இலவச மோட்டார் மின் இணைப்பு திரு.இராஜேந்திரனுக்கு சாதகமாக அவரது சொந்த நிலத்தில் அவரது கிணற்றுக்கு அருகாமையிலேயே மின்மாற்றி அமைத்துத் தந்த மேற்படியார்கள், மின் வாரியத்துக்கு ரூ.4,00,000/-

செலுத்திய தனக்கு மேற்படியார் நிலத்தில் உள்ள மின் மாற்றியிலிருந்து பொய்யான தகவலைத் தெரிவித்து மின் இணைப்பு கொடுக்க முயற்சிக்கிறார்கள் என தான் தெரிவித்த தகவலும் தீர்ப்பில் பதிவு செய்யப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 இது தொடர்பாக உயர் மின் அலுவலர்களுக்கு புகார் செய்து, அதன் அடிப்படையில் பெரம்பலூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலக உதவி செயற்பொறியாளர் திரு.சேகர் அவர்கள், தன் முன்பாக தா.பழூர் AE யிடம் செல்பேசியில் தனது ஆழ்குழாய் கிணற்றுக்கு அருகாமையில் தனி மின்மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கூறியதை தான் விசாரணையில் தெரிவித்ததை தீர்ப்பில் பதிவு செய்யப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேற்படி விசாரணையில் தா.பழூர் AE தனது ஆழ்குழாய் கிணற்றுக்கு விசாரணை நடைபெற்ற நாளுக்கு சிலமாதங்களுக்கு முன்பே மேற்படி மின் மாற்றியிலிருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டதாக பொய்யான தகவலைத் தெரிவித்தார். தான் அது பொய் என்றும், இதுநாள் வரை (31/8/2021 விசாரணை நாள்) மின் இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்றும், இது தொடர்பாகத்தான் உயர் மின் அலுவலர்களுக்கு புகார் மனு அனுப்பி, நடவடிக்கை எடுக்கப்படாததால், தலைவர் அவர்களுக்கு புகார் மனு செய்து அது தற்சமயம் விசாரிக்கப்பட்டு வருகிறது என தெரிவித்த தகவலையும் தீர்ப்பில் பதிவு செய்யவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மேற்படி விசாரணைக்கு 31/8/2021–இல் மாலை 6.30 மணிக்கு ஆஜராகி விசாரணை முடிந்து இரவு 10.30 மணியளவில் வீடு திரும்பியதாகவும், மறுநாள் (1.9.2021) காலை 11.00 மணியளவில் தா.பழூர் AE மற்றும் மின்வாரிய ஊழியர்கள் தனது நிலத்துக்கு வந்து மேற்படி மின் மாற்றியிலிருந்து மின் இணைப்பு கொடுக்க முயற்சி செய்தனர். மேற்படி வழக்கின் தீர்ப்பு வந்த பிறகு மின் இணைப்பு கொடுக்கலாம் என்றும், விசாரணையில் தா.பழூர் AE ஏற்கனவே எனக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாக பொய்யான தகவலைத் தெரிவித்துள்ளார் என ஆட்சேபனை தெரிவித்ததாகவும், மேற்படியார்கள் காவல் துறை உதவியுடன் "குறைதீர் மன்றத் தலைவர்" அவர்கள் இன்று (1/9/2021) உடனுக்குடன் மின் இணைப்பு வழங்கக் கூறினார் என்றும், எதுவாக இருந்தாலும் அவரிடம் பேசிக் கொள்ளுங்கள் என்றும் அடாவடியாக மின் இணைப்பு கொடுத்ததாகவும், மேற்படி சம்பவம் குறித்து

குறைதீர்மன்ற தலைவர் அவர்களுக்கு 02.09.2021–இல் தகவல் தெரிவித்ததாகவும், பிற உயர் மின் அலுவலர்களுக்கும் அதன் நகலை அனுப்பியதாகவும், மேற்படி விபரம் எதுவும் 13.09.2021 நாளிட்ட தீர்ப்பில் குறிப்பிடப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேற்கண்ட விதத்தில் மின் நுகர்வோரான தனது கருத்துக்கள் மற்றும் தகவல்கள் எதையும் ஏற்றுக் கொள்ளாமலும் அதை பதிவு செய்யாமலும், ஆதாயம் பெற்றுக் கொண்டு முறைகேட்டில் ஈடுபட்டுள்ள பொய்யான தகவல்களை விசாரணையில் தெரிவித்துள்ள மின் அலுவலர்களுக்கு சாதகமாகவும் மேற்படி வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படியார்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், தனக்கு உரிய நியாயம் வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 புதிய விவசாய மின் இணைப்பு வேண்டி விரைவு தட்கல் திட்டத்தில் மின் இணைப்பு பெற 15 HP க்கு ரூ.4,00,000/– தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதாகவும், விரைவு தட்கல் திட்ட மின் இணைப்பு என்பது விவசாய விண்ணப்ப பதிவிற்கான வரிசையின் முன்னுரிமையை விரைந்து மின் இணைப்பு பெறுவதற்காக மட்டுமேயன்றி மின்மாற்றி அமைத்து தர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே மின்மாற்றி அமைத்திட இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் தெரிவித்தபடி புதிய கம்பங்கள் ஏதும் அமைக்கப்படவில்லை எனவும், ஏற்கனவே வணிக மின் இணைப்பிற்காக சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த இரண்டு வயர் ஒருமுனை மின்பாதையை நான்கு வயர் மும்முனை மின்பாதையாக மாற்றம் செய்து புதிய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரரால் விரைவு தட்கல் திட்டம் 2019–2020 ஆண்டில் புதிய விவசாய மின் இணைப்பு பெற தயார் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கு மதிப்பீடு தயார் செய்யும் போது அருகாமையில் உள்ள காடுவெட்டாங்குறிச்சி மின் மாற்றி எண்–IV, 16 KVA–வில் திறன் இல்லாததால் மின்மாற்றி திறனை 16 KVA–லிருந்து 63 KVA–ஆக திறன் உயர்த்தியும், ஏற்கனவே சென்று கொண்டிருக்கும் தாழ்வழுத்த மின்பாதை ஒருமுனை இரண்டு வயரை மும்முனை நான்கு வயராக மாற்றம் செய்து மனுதாரருக்கு

கடந்த 01.04.2021 அன்று மின் இணைப்பு எண் 329-020-730 வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 புதிய வீராணம் திட்டத்தில் மின்இணைப்பு பெற திரு.ப.இராஜேந்திரன், த.பெ.பக்கிரி அவர்கள் கடந்த 25.07.2005 ல் உதவி மின்பொறியாளர்/இ.கா/தா.பழூர் பிரிவு அலுவலகத்தில் தயார் நிலை பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி நபருக்கு மின் இணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்யும் போது ஏற்கனவே உள்ள காடுவெட்டாங்குறிச்சி மின்மாற்றி-1 100 KVA வில் போதிய திறன் இல்லாததால் திர.ப.இராஜேந்திரன், த.பெ.பக்கிரி அவர்களின் வயலுக்கு அருகில் செல்லும் உயரழுத்த மின்பாதையிலிருந்து புதிய மின்பாதை அமைத்து 16KVA மின்மாற்றி நிறுவிட மதிப்பீடு அனுமதிக்கப்பட்டதாகவும், அதன்படி பணிகள் முடிக்கப்பட்டு மின்இணைப்பு எண் 329-020-720 நாள் 08.01.2021 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், மனுதாரர் விரைவு தட்கல் திட்டத்தில் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு முன்பாகவே திரு.ப.இராஜேந்திரன், த.பெ.பக்கிரி என்பவருக்கு புதிய வீராணம் திட்டத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரர் மின்இணைப்பு கோரும் வயலுக்கு அருகாமையிலுள்ள காடுவெட்டாங்குறிச்சி மின்மாற்றி எண் IV லிருந்த 16KVA மின்மாற்றியை 63 KVA மின்மாற்றியாக திறனுயர்த்தி மின் இணைப்பு வழங்கிய நிலையில் மின்னழுத்தமும் வரையறைக்குள் இருந்ததால் மனுதாரருக்கு புதிய மின்மாற்றி அமைக்க வேண்டியதில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரருக்கு புதிய விவசாய மின் இணைப்பு விரைவு தட்கல் திட்டத்தில் கடந்த 01.04.2021 லேயே வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் மேற்படி மின் இணைப்பை பயன்படுத்தாமல் இருந்துள்ளதாகவும், கடந்த 01.04.2021-இல் புதிய மின்இணைப்பை பெற்றுக்கொண்ட மனுதாரர் திரு.மா.செந்தமிழ்செல்வன் அவர்கள் புதிய மின்மாற்றியை தனது வயலில் அமைத்த பின்னர் தான் மின் இணைப்பை பயன்படுத்துவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் புல எண் 495/2-இன் தோட்டத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு 15HP மின் பளுவுடன் தட்கல் திட்டத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி 31.10.2019 அன்று ரூ.4,00,000/- செலுத்தியதாகவும், தனது ஆழ்துளை கிணற்றுக்கு அருகில் தன்னுடைய நிலத்தில் மின் மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்குமாறு கோரியதாகவும், தெரிவித்துள்ளார். ஆனால் உதவி மின் பொறியாளர் இளையராஜா மற்றும் வணிக ஆய்வாளர் திரு. சிவக்குமார் ஆகியோர் மோசடி செய்து தன்னுடைய வேண்டுதல்படி மின்மாற்றி அமைக்காமல், திரு ராஜேந்திரன் என்பவர் பட்டா நிலத்தில் மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு கொடுத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். தன்னுடைய ஆழ்குழாய் கிணற்றுக்கு அருகாமையில் தனி மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு கொடுக்குமாறு மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

7.3 திரு. ப. இராஜேந்திரன் அவர்கள் 25.07.2005 அன்று தயார் நிலை பதிவு செய்துள்ளதன்படி ஏற்கனவே உள்ள காடுவெட்டாங்குறிச்சி 100KVA மின் மாற்றி I-இல் போதிய திறன் இல்லாததால் திரு இராஜேந்திரன் அவர்களின் நிலத்திற்கருகில் செல்லும் உயரழுத்த மின்பாதையிலிருந்து புதிய மின் பாதை அமைத்து 16 KVA மின்மாற்றி நிறுவி மின் இணைப்பு எண் 329-020-720 நாள் 08.01.2021 அன்று வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். விரைவு தட்கல் திட்டத்தில் புதிய விவசாய மின் இணைப்பு பெற தயார் நிலை பதிவு செய்தபின் மேல்முறையீட்டாளரின் ஆழ்துளை கிணற்றுக்கு அருகாமையில் உள்ள காடுவெட்டாங்குறிச்சி மின்மாற்றி எண் VII, 16KVA-இன் திறனை 63KVA ஆக உயர்த்தி ஏற்கனவே உள்ள ஒருமுனை இருவயர் தாழ்வழுத்த மின்பாதையை மும்முனை நான்கு வயராக மாற்றி 01.04.2021 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் வயலுக்கு அருகில் உள்ள காடுவெட்டாங்குறிச்சி 16KVA மின் மாற்றி எண் VII-ஐ 63 KVA ஆக திறனுயர்த்தி மின் இணைப்பு வழங்கிய நிலையில் மின்னழுத்தம் வரையறைக்குள் இருந்ததால் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை ஏற்படவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேல்முறையீட்டாளர் தட்கல் திட்டத்தில் மின் இணைப்பு எண் 329-020-730 பெறுவதற்கு முன்பே காடுவெட்டாங்குறிச்சி 100 KVA மின்மாற்றி-I லிருந்து 10 HP, LA3A1 மின் இணைப்பு பயன்பாட்டிலிருந்ததாகவும், மேற்படி மின்மாற்றி 97.5KVA

மின்பளுவுடன் பயன்பாட்டிலிருந்ததால் தற்போதைய தட்கல் திட்டத்தில் 15 HP மின்பளுவுடன் மின் இணைப்பு வழங்க வேண்டிய சூழ்நிலையில் 102.5 KVA மின்பளுவாக அதிகரிப்பதால் காடுவெட்டாங்குறிச்சி 16KVA மின்மாற்றி எண் VII– ஐ 63 KVA ஆக மின் திறனை உயர்த்தி மின்பாதை அமைத்து உயரழுத்த மின்பாதை அமைக்க வேண்டிய தேவையின்றி குறைந்த செலவில் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், விவசாய மின் மோட்டார் இயங்குவதற்கு தேவையான மின்னழுத்தம் வரையறைக்குள் இருந்ததாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் உரிமம்தாரரின் வழிகாட்டுதல்படியே மதிப்பீடு செய்து மின் இணைப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ள எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக கருதுகிறேன். மேலும் தன்னுடைய மின் இணைப்பில் மின்னழுத்த குறைபாடு இல்லையெனவும், மின்மோட்டார் சரியாக இயங்குவதாகவும், மேல்முறையீட்டளார் தெரிவித்துள்ளார். எனவே, தன்னுடைய ஆழ்துளை கிணற்றுக்கு அருகில் தனியொரு மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டுமென்கிற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையதல்ல. மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின் இணைப்பு மோட்டாருக்கு குறைபாடில்லாத மின்சாரம் வழங்க வேண்டுமென கோரலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட உயரழுத்த மின்பாதையிலிருந்து மின்பாதை அமைத்து தான் குறிப்பிடும் இடத்தில் மின் மாற்றி அமைந்து மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கோருவது ஏற்க முடியாது. தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், ஆய்வு நடத்தி மதிப்பீடு செய்து மின்விநியோக விதிமுறைகளின்படி மின் இணைப்பு வழங்குவது எதிர்மனுதாரரின் கடமையாகும். மேலும், தட்கல் திட்டத்தில் ரூ.4,00,000/– செலுத்தி மின்னிணைப்பு விரைவாக முன்னுரிமையின் அடிப்படையில் பெறுவதற்காகத் தானே தவிர, மேற்கண்ட தொகை செலுத்துவதால் மின் மாற்றி மேல்முறையீட்டாளருக்கு சொந்தமாகாது எனவும், தனக்கு மட்டும் தனியாக ஒரு மின்மாற்றியமைக்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல.

7.5 எதிர்மனுதாரர்கள் மின்குறைதீர் மன்றத்தில் பொய்யான தகவல்கள் தெரிவித்தாகவும், மின்மாற்றியிலிருந்து தன்னுடைய ஆழ்துளை கிணற்றுக்கு 8 மின்கம்பங்கள் அமைத்துள்ளதாகவும் ஆனால் 5 மின்கம்பங்கள் தான் அமைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தவறான தகவல் தெரிவித்ததாகவும்,

எதிர்மனுதாரர்கள் கையூட்டு பெற்றதாகவும், மின் அலுவலர்களுக்கு சாதமாக மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ள முறையீடுகள் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மின்குறைதீர்ப்பாளருக்கு இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

**8.0 <u>பகுப்பாய்வு:</u>**

8.1 பெரம்பலூர் மின்விநியோக வட்ட மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு 17.07.2021 அன்று பதிவஞ்சலில் அனுப்பிய தன்னுடைய மனு 19.07.2021–இல் பெறப்பட்டு 30 நாட்கள் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லையெனவும், தான் 18.08.2021 அன்று நேரில் முறையிட்ட பிறகுதான் பதிவு செய்து விசாரிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்தின் இத்தகைய செயல்பாடு வருத்தமளிக்கிறது. எதிர்வரும் காலங்களில் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் பெறப்படும் மனு, பெறப்பட்ட நாளிலிருந்து 5 வேலை நாட்களுக்குள் மனு பெறப்பட்டதற்கான ஒப்புகை கடிதம் வழங்கப்பட்டு நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

**9.0 <u>முடிவுரை:</u>**

9.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி தனது நிலத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றுக்கு அருகில் தனி மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்கக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்கிறேன்.

9.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டாளர் மனு எண் 77/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:
1. திரு. மா. செந்தமிழ்செல்வன்,
த/பெ. மாணிக்கம்,
குடிகாடு தெரு, காடுவெட்டாங்குறிச்சி அஞ்சல்,
அரியலூர் மாவட்டம் – 612 904.

2. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு, அரியலூர் – 621 713.

3. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/ஜெயங்கொண்டம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
12 A1, குஞ்சிதபாதபுரம், ஜெயங்கொண்டம்,
உதயர்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் – 621 904.

4. உதவி பொறியாளர்/ இ.கா./தா. பழூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1/43, செட்டி தெரு, தா. பழூர்,
உதயர்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் – 621 904.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 230 KV ஆட்டோ துணை வளாகம் பெரம்பலூர்,
நான்கு ரோடு அருகில், பெரம்பலூர் – 621 220.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.